கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.np.gov.lk e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல. / මගේ අංකය / My No. சுற்றுநிருப இல: 2015/02 உமது இல / ඔබේ අංකය / Your No. திகதி / දිනය / Date 24/04/2015

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

## மாணவர் ஆரோக்கிய மேம்பாட்டுத் திட்டத்தினை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தல்

வடக்கு மாகாணத்திலே கடந்த 30 ஆண்டு காலப் போரினாலான பாதிப்புக்களும், அதன் பின்னரான சூழல் மாற்றங்களும் மாணவர்கள் மத்தியில் பல்வேறு வகையான பிரச்சினைகளைத் தோற்றுவித்து வருவதைஅறிய முடிகின்றது. குறிப்பாகப் போஷாக்கின்மை, அதீத போஷாக்கு, பாலியல் துஷ்பிரயோகம், பதின்மவயதுக் கர்ப்பம், சிகரெட், மதுபானம், போதைவஸ்து பாவனை மற்றும் தனிநபர் சுகாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தற்போதைய மாணவர்கள் மத்தியில் கூடுதலாக இனங் காணப்பட்டுள்ளன.

இச் சுற்றறிக்கையானது மேற்படி பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பாக கடந்த 09.04.2015 மற்றும் 15.04.2015 ஆகிய தினங்களில் வட மாகாணத்தைச் சார்ந்த கல்வி மற்றும் சுகாதாரத்துறை சார்ந்த அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில், வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் வெளியிடப்படுகின்றது. ஆகவே, கீழே தரப்பட்ட அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

1. ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர் ஆரோக்கியம் சம்பந்தமாக பெற்றோர்களுக்கான கலந்துரையாடலினைக் குறைந்தது வருடத்திற்கு இருமுறையேனும் ஏற்பாடு செய்தல் வேண்டும். இதில் போஷாக்கு, தனிநபர் சுகாதாரம், சிகரெட், மதுபானம், போதைவஸ்துப் பாவனை, பாலியல் துஷ்பிரயயோகம், சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட வேண்டும். மேற்படி கலந்துரையாடலில் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைக்கான வலயப் பிரதிநிதி, பெற்றோர்கள்(தந்தையர்களும் கலந்து கொள்வதனை உறுதிப்படுத்தவும்), சுகாதார வைத்திய அதிகாரி, சமூக மருத்துவ உத்தியோகத்தர்கள் (சுதேச மருத்துவம்), பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றல் வேண்டும்.

2. மேற்படி விடயங்கள் சம்பந்தமாக மக்களிற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், அரங்க (நாடகங்கள், தெருக்கூத்துக்கள்) மற்றும் ஏனைய செயற்பாடுகள் (கண்காட்சிகள், சுவரொட்டி தயாரித்தல் போட்டிகள் உட்பட) ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.

3. பாடவிதானத்திலுள்ள இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான விடயங்களை மாணவர்கட்கு உரிய முறையில் கற்பிக்கப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும். இதற்குப் பொறுப்பான அதிபர்கள் தமது பாடசாலைகளில் விஞ்ஞான/சுகாதார கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் வருடாந்த ஆசிரியர் தரங்கணிப்பு படிவத்தில் இவ்விடயத்தையும் உட்படுத்த வேண்டும்.

4. பாடசாலைகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் குறைநிறைகளை அறியும் ஆலோசனைப் பெட்டியொன்று வைக்கப்படல் வேண்டும். இந்த ஆலோசனைப் பெட்டிகளில் சேர்க்கப்படும் ஆலோசனைகள் மற்றும் முறைப்பாடுகளை ஆராய்வதற்கும், அதற்கான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான குழுவொன்று அமைக்கப்படுதல் வேண்டும். இந்தக் குழுவில் அதிபர், பிரதி அதிபர், வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அங்கத்துவம் வகித்தல் வேண்டும்.

5. மாணவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் அல்லது எவ்வாறான தேவையாயிருப்பினும் கூட கையடக்கத்தொலைபேசியை பாடசாலைக்கு கொண்டு வருதலை அல்லது பாவித்தலை அனுமதித்தலாகாது. இதேபோல் பாடசாலை நேரங்களில் ஆசிரியர்கள் தமது கடமைச்செயற்பாடுகளில் ஈடுபடும்போது தமது கையடக்கத்தொலைபேசியை செயலிழக்கச் செய்து வைத்திருத்தல் வேண்டும். இது சம்பந்தமாக மத்திய கல்வி அமைச்சின் பதில் செயலாளரின் 2009.07.28 ஆம் திகதிய 2009/26 இலக்க சுற்றறிக்கையை இறுக்கமாக கடைபிடிக்கவேண்டும்.

6. பாடசாலைகள் தோறும் சுகநல மேம்பாட்டு அறையொன்று உருவாக்கப்பட்டு அங்கு ஒரு தவணைக்கு ஒருமுறை மாணவர் போஷாக்கு நிலை (நிறை, உயரம் அளத்தல், உடற்திணிவு சுட்டெண்ணை மதிப்பிடல், போஷாக்கு நிலையை மதிப்பிடல்), பார்வைக் குறைபாடுகளை அடையாளங் காணுதல் போன்றவை நடைபெறுவதனையும், அங்கு முதலுதவி வசதிகள், சுகாதாரக் கல்வி வெளியீடுகள் என்பன இருப்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.
இதற்குப் பொறுப்பாக அதிபர், பாடசாலைச் சுகாதாரக் குழுப் பொறுப்பாசிரியர்கள், பாடசாலைச் சுகாதாரக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் இருத்தல் வேண்டும். சுகநலக் குறைபாடுகள் இருப்பதாக இனங்காணப்பட்ட மாணவர்கட்கு சுகாதார வைத்திய அதிகாரியினால் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். மேலும் ஒவ்வொரு மாணவரினதும் உடற்திணிவுச் சுட்டெண்ணானது குறித்த மாணவரின் முன்னேற்ற அறிக்கையில் ஒவ்வொரு தவணையும் பதிவு செய்யப்படல் வேண்டும்.

7. பாடசாலை உணவகங்களில் போஷாக்கான உணவுகள் விற்கப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும். மேலும் அங்கு சோடா வகைகள், இனிப்பு வகைகள் போன்றன விற்பதைத் தவிர்த்தல் வேண்டும். அத்துடன் பாடசாலைச் சூழலில் சுகாதாரத்திற்கும் போசணைக்கும் இணக்கமான முறையில் உணவு வழங்கப்படுகின்றதனை உறுதிப்படுத்தும் சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கை ஒன்றை பாடசாலையின் ஒவ்வொரு தவணைக் காலத்திலும் ஒரு தடவையாவது பெற்றுக் கொள்வது மிகவும் பொருத்தமானதாகும். இது சம்பந்தமானவற்றினைக் கல்வியமைச்சின் 2011/03 இலக்க 18.01.2011 ஆம் திகதிய சுற்றுநிருபத்தை நடைமுறைப்படுத்துவதன்பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படவேண்டும்.

8. பாடசாலைச் சுகாதாரக் குழுக்கள் மேலும் வலுப்படுத்தப்பட்டு அவற்றினூடாக மாணவர் போஷாக்கு நிலை, தனிநபர் சுகாதாரம், சுற்றாடல், சுகாதாரம், முதலுதவி, சுகாதாரக் கல்வி, பாடசாலை உணவகம் போன்றவை கண்காணிக்கப்படல் வேண்டும். அத்துடன் பாடசாலைக்கு அண்மையில் தடைசெய்யப்பட்ட உணவு மற்றும் போதையூட்டும் பதார்த்தங்கள் விற்பனை செய்யப்படுவது குறித்து கண்காணிக்கப்பட்டு அது தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரிக்கும் ஏனைய பொருத்தமான அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்படல் வேண்டும்.

9. மாணவர்கட்கு பாடசாலை மதிய உணவுத் திட்டத்தில் போஷாக்கான, சுகாதாரமான உணவுகள் கிடைப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். இதற்குப் பொறுப்பாக அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோர் இருத்தல் வேண்டும். அத்துடன் தூய குடிநீர் கிடைப்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

10. மாணவர் மத்தியில் சிகரெட், மதுபானம் மற்றும் போதைவஸ்து ஆகியவற்றின் பாவனையினால் ஏற்படுகின்ற அபாயநிலை சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும். இதற்குப் பொறுப்பாக அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோர் இருத்தல் வேண்டும்.

11. மாணவர்கள் மத்தியில் தனிநபர் சுகாதாரம் தொடர்பான விழிபபுணர்வு ஏற்படுத்தப்படுவதுடன், அவர்கள் அதனை சரியான முறையில் பின்பற்றுகிறார்களா எனக் கண்காணித்தல் வேண்டும். இதற்குப் பொறுப்பாக அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சுகாதாரக் குழுக்கள், பெற்றோர்கள், சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர் இருத்தல் வேண்டும்.

12. பிள்ளைகளை வளர்த்தல், பிள்ளைகளைக் கையாளுதல் பற்றிய பெற்றோர்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சிகளை வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர்களின் மூலம் பாடசாலைகள் தோறும் வகுப்பு ரீதியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

13. வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர்கள் தமது பாடசாலையின் இடைவிலகும், ஒழுங்கீனமாகப் பாடசாலைக்கு வருகை தரும் மற்றும் திறமை குறைந்தவர்கள் என அடையாளங் காணப்படும் மாணவர்களைத் தனித் தனியாக மதிப்பீடு செய்து, அம் மதிப்பீட்டு அறிக்கையினை அதிபர் ஊடாக வலய மற்றும் மாகாண கல்வி பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

14. பொது சுகாதாரப் பரிசோதகரினால் மேற்கொள்ளப்படும் பாடசாலை சுகாதார ஆய்வின் முடிவுகள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபருக்கும், கோட்டக் கல்வி அதிகாரிக்கும் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிக்கும் வழங்கப்படல் வேண்டும். மேலும், இந்த ஆய்வில் இனங்காணப்பட்ட குறைபாடுகள் மேற்குறிப்பிட்ட அதிகாரிகளினால் கண்காணிக்கப்பட்டு, நிவர்த்தி செய்யப்படல் வேண்டும்.

15. பாடசாலை வகுப்பறைகளில் காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் ஆகியன பாட நேரங்களில் போதியளவில் இருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

16. பாடசாலையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான மலசல கூடங்கள் தேவையானளவு பொருத்தமான இடங்களில் இருப்பதனையும், அவை தண்ணீர் வசதிகளுடன் துப்பரவாகப் பேணப்படுவதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

17. பாடசாலைச் சுகாதாரக் குழுக்கள் இச் சுற்றுநிரூபம் அமுல்படுத்துவதற்கு ஆதரவளித்தல் வேண்டும். மேலும் இச் சுற்றுநிரூபத்தில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்கள் சரியாகப் பின்பற்றப்படாவிடின், சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் அவற்றிற்குப் பொறுப்புக் கூறக் கடப்பாடுடையவராகின்றார் என்பதனையும் மனங்கொள்ள வேண்டும்.

**சி.சத்தியசீலன்,**
செயலாளர்.

**சி. சத்தியசீலன்**
**செயலாளர்**
**கல்வி பண்பாட்டலுவல்கள்**
**விளையாட்டுத்துறை அமைச்சு**
**வடமாகாணம்**
**யாழ்ப்பாணம்**

1. கௌரவ முதலமைச்சர், வடக்கு மாகாண சபை
2. கௌரவ அமைச்சர், கல்வி அமைச்சு, வடமாகாணம்
3. கௌரவ அமைச்சர், சுகாதார அமைச்சு, வடமாகாணம்
4. பிரதம செயலாளர், பிரதம செயலாளரின் அலுவலகம், வடமாகாணம்
5. செயலாளர், சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணம்
6. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாணம்
7. மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர், வடமாகாணம்
8. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் - அனைத்து மாவட்ட
9. உள வைத்திய நிபுணர் / வைத்திய அதிகாரி (உளநலம்) - அனைத்து மாவட்ட
10. தாய்சேய் நல வைத்திய அதிகாரி - அனைத்து மாவட்ட (வடமாகாணம்)
11. சுகாதார வைத்திய அதிகாரி - அனைத்துப் பிரிவு, அனைத்து மாவட்ட
12. பாடசாலை வைத்திய அதிகாரி, வட மாகாணம்
13. சமூக மருத்துவ உத்தியோகத்தர் (சுதேச மருத்துவம்) - அனைத்து மாவட்ட (வடமாகாணம்)
14. மாகாணக் கல்விப் பணிப்பாளர், வட மாகாணம்
15. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
16. சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்
17. சகல உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்
18. சகல கோட்டக் கல்வி அலுவலகர்கள்
19. சகல ஆசிரிய ஆலோசகர்கள்